# தோற்றப் பாடல்கள்

***முனைவர் ஜி.எஸ்.பிரபின்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராசிபுரம்.

மலர்: 4

இதழ்: 2

மாதம்: அக்டோபர்

வருடம்: 2019

ISSN: 2454-3993

தமிழக, கேரள மாநிலங்களின் தென்பகுதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில்வாழும்பழங்குடிமக்கள்காணிக்காரர் ஆவார்கள். இவர்கள் தமிழகத்தில் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படுகின்றனர். இவர்களுக்கு காணி, கணியன், காணிக்கர், வேலன்மார், மலையரசன் முதலிய பல்வேறு பெயர்கள் உண்டு. காணிக்காரர்களிடம் வழிபாட்டுடன் தொடர்புடைய சாற்றுப்பாடல்கள்,தோற்றப்பாடல்கள் ஆகியவை காணப்படுகின்றன. அவற்றில் தோற்றப்பாடல்கள் தெய்வங்களின் வரலாறுகளைக் கூறுவதாகும். நாட்டுப்புறமக்கள் தெய்வங்களைப் புகழ்ந்துபாடி விழா எடுப்பதைப் போன்று காணிக்காரர்கள் தோற்றப்பாடல்கள் மூலம் விழா எடுத்து வழிபடுகின்றனர்.

**தோற்றக்கதைகள்**

நாட்டுப்புறமக்கள் வாழ்வில் தெய்வ நம்பிக்கையானது அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத ஓர் அம்சமாகக் காணப்படுகிறது, தாங்கள் வழிபடக்கூடிய தெய்வங்களைச் சிறப்பித்து பூசைகள் செய்வது பழங்காலம் தொட்டே நடை முறையில் இருந்து வருகிறது, மக்களிடையே வழிபடப்படும் தெய்வங்கள் ஒவ்வொன்றிற்கும் தனிச்சிறப்புகள் காணப்படுவதுண்டு, ஆதிமனிதன்கூட தான் புதிதாகக் காணும் ஒவ்வொரு பொருளுக்கும் அதன் பின்வரலாற்றைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டினான், இந்த இயல்பு அவர்கள் வழிபடக்கூடிய தெய்வங்களிடத்தும் தொடர்ந்து வந்தது, தாங்கள் வழிபடக்கூடிய தெய்வங்களின் தோற்றக்கதைகளை வாய்மொழி இலக்கியங்களாகப் படைக்கும் பண்பு எல்லாச் சமூகத்திலும் ஆரம்பத்தில் காணப்பட்டது, மொழி வளர்ச்சியடைந்து எழுத்துக்கள் தோன்றியபிறகுதான் ஏட்டிலக்கியமாக தெய்வத் தோற்றக்கதைகள் உருவாயின, பழங்குடி மக்களிடையே இவ்வாறு வாய்மொழி வடிவிலான தெய்வத் தோற்றக்கதைகள் பல உள்ளன,

புராணங்கள் என்பவை ஆரம்பகாலத்தில் வாய்மொழியாக வழங்கப்பட்டவை என்பது பொதுவான கருத்து.

பழங்குடிமக்கள் தோற்றுவித்த இவ்வித தெய்வம் தொடர்பான கதைகளே பிற்காலத்தில் பெரும் புராணங்களாகத் தோற்றம் பெற்றிருக் கக்கூடும், இவ்விலக்கியங்களில் படைப்பாளியின் கற்பனைகள் குறிப்பிடத்தகுந்த அளவில் கலந்து காணப்படுவது இயல்பு.

தெய்வங்களின் தோற்றக்கதைகளை ஆறு. இராமநாதன் மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார், அவை

1. புராண இலக்கியங்களில் காணப்படும் வைதீக தெய்வங்களின் தோற்றக்கதைகள்.
2. நாட்டுப்புற எழுத்து மரபான கதைப்பாடல்கள் வழியாக அறியப்படும் நாட்டுப்புறத் தெய்வங்களின் தோற்றக்கதைகள்.
3. வாய்மொழி மரபிலிருந்து சேகரிக்கப்படும் நாட்டுப்புறத்தெய்வங்களின் தோற்றக்கதைகள்,

இதில் மூன்றாவதுவகையான வாய்மொழி மரபிலிருந்து சேகரிக்கப்படும் நாட்டுப்புறத் தெய்வங்களின் தோற்றக்கதையினை ஒத்ததுதான் காணிக்காரர்களிடையே வழங்கப்படும் தோற்றப்பாடல்கள் ஆகும்.

### தோற்றம்-சொல்விளக்கம்

தோற்றம் எனும் சொல்லானது வட மொழியில் உள்ள ஸ்தோத்ரம் எனும் பதத் திலிருந்து உருவாகியிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஸ்தோத்ரம்[1] என்பதற்கு புகழ்ச்சி, வேண்டுதல் போன்ற பொருள்கள் உள்ளன. பரிபாடல் திருமாலின் சிறப்பானது நின்தோற்றமும் அகலமும் நீரின்உள என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் இடம்பெறும் தோற்றம் எனும் சொல்லானது வெளிப்படுதல் என்பதைத் குறிப்பிடுகிறது.

திராவிட வேர்ச்சொல்லான தோன்றுதல் எனும் பொருளிலும் தோற்றம் என்பது பொருள் கொள்ளப்படுகிறது, தோன்றுதல் என்பதற்கு உணர்தல்என்பது பொருளாகும்.[2] இவற்றை வைத்துப் பார்க்கும்போது தோற்றப்பாடல் என்பதற்கு வழிபடும் கடவுளை நோக்கி உணர்வுகளை வெளிப்படுத்தி, புகழ்ந்து பாடுதல் என்று பொருள் கொள்ளலாம், மேலும் தெய்வமானது பாடும் மனிதனிடத்தில் தோன்றுகின்ற பொருளிலும் தோற்றப் பாடல்கள், பொருள் கொள்ளப்படுகிறது. வணங்கப்படும் தெய்வத்தின் குணநலன்களை மனிதன் வாயிலாக வெளிப்படுத்தப் பாடப்படுவதும், தெய்வத்தை வரவழைப்பதுமான பாடல்களும் தோற்றப்பாடல்கள் என்று இராகவன் பையநாடு குறிப்பிடுகிறார்.[3] இப்பாடல்கள் நாட்டுப்புற இலக்கியங்களின் அடிப்படைத் தன்மையான வாய்மொழிவடிவில் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறையினரால் பாடப்பட்டு வருகின்றன. இவ்வாறு தெய்வத்தினை வெளிப்படுத்தும் அல்லது வரவழைக்கும் நிகழ்வு தோற்றம் என்றும், அப்போது பாடப்படும் பாடல்கள் தோற்றப்பாடல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

### பிற இனத்தவரிடம் தோற்றப்பாடல்கள்

வட கேரளப்பகுதிகளில் பல இடங்களில் நிகழ்த்தப்படும் வழிபாட்டு ரீதியிலான கலைவடிவங்கள் தெய்யம், திறை, கதகளி போன்றன. இக்கலைவடிவங்களிலும் குறிப்பிட்ட தெய்வங்கள் அல்லது கதைத்தலைவர்களின் வரலாறுகள் கூறப்படுகின்றன. இக்கலைகளில் இடம்பெறும் தெய்வத்தின் வரலாறுகளைப்பாடல் வடிவில் பாடுகின்றனர். இப்பாடல்களும் தோற்றப்பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன,

கேரளத்தில் நிகழ்த்துக்கலைகளில் பாடப்படுகிற தோற்றப்பாடல்கள் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். தெய்யம் மற்றும் கதகளி போன்ற கலைகளில் பாடப்படும்

தோற்றப்பாடல்களில் சமஸ்கிருத சொற்கள் பல கலந்து காணப்படுகின்றன. அவற்றில் பழமையானதாக கருதப்படும் பொட்டன் தெய்யம்எனும் தெய்யக்கலையில் சமஸ்கிருதசொற்கள் இடம்பெறவில்லை[4]

தெய்யம், கதகளி போன்ற இக்கலைகளினூடே தெய்வம்வரவழைக்கப் படுவதில்லை, இக்கலைகளில் புனையப்படும் கிரீடம், முகஅலங்காரம் போன்றவை பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை என்றும், இவற்றில் இடம்பெறும் தோற்றப்பாடல்களும் பிற்காலத்தில் பாடப்பட்டவைதான் என்றும் தெய்யக்கலைகளை ஆராய்ச்சி செய்த மு.மு..நே.குறுப்பு[5] கூறுகிறார் மேற்கூறிய கருத்துக்களை வைத்துப் பார்க்கும்போது பழங்குடிமக்களிடமே இக்கலை ஆரம்ப காலம் முதற்கொண்டு வழங்கப்பட்டது என்பது தெளிவாகிறது. எனவே காணிக்காரர்களின் தோற்றப்பாடல்கள் மிகப்பழமையானவை என்று கூறலாம்,

காணிக்காரர்களைப் போன்று கேரளத்தில் காணப்படுகின்ற புலையர் இனத்த வரிடமும் தோற்றப்பாடல்கள் காணப்படுகின்றன, இது தொடர்பான செய்திகளை. முண்டியாடி தாமோதரன் என்பவர் பின்வருமாறு கூறுகின்றனர், புலையர்கள் மேல்ஜாதி மக்களைக் கண்டு அஞ்சி மலைகளிலும், காடுகளிலும் மறைந்து வாழ்ந்தனர், அப்பொழுது அவர்கள் தங்களுக்கென சில தெய்வங்களை வழிபட்டனர். அத்தெய்வங்களுக்காக தோற்றப்பாடல்களைப் பாடி வந்துள்ளனர். முன்புவரை காடுகளில் வாழ்ந்த புலையர்கள் தற்போது சமவெளியில் சமஉரிமையுடன் வாழ்கின்றனர். முன்பு அவர்களால் வனப்பகுதிகளில் பாடப்பட்ட தோற்றப்பாடல்கள் தற்போது சமவெளிகளிலும் பாடப்பட்டு வருகின்றன[6] இவர்களைப்போன்று வடக்கு மலபார் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட புலையர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வேடம் புனைந்து ஆடுகிற தெய்யம்எனும் கலையில் வாய்மொழிப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. அடிமைத்தனம் மற்றும் தீண்டாமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட அம்மக்களுக்கு வருடத்தில் ஒருமுறையாவது கிடைக்கின்ற தெய்வப்பதவிதான் தெய்யம் ஆகும். உயர்ஜாதியைச் சார்ந்தவர்கள்கூட அன்று தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சார்ந்த தெய்யக்கலைஞன் முன்பாக அடி பணிந்து நிற்கிறான். இக்கலையில் பாடப்படுகின்ற பாடல்களும் தோற்றப்பாடல்கள் என்றழைக்கப்படுகின்றன. இப்பாடல்களில் இம்மக்கள் தங்கள் அடிமைத்தனக் குமுறல்களை வெளிப்படுத்தத் தவறுவதில்லை.

தெய்யம் நிகழ்வில் பாடப்படும் தோற்றப்பாடல்கள் ஒவ்வொரு பகுதிகளிலும் வேறுபட்டு காணப்படுகின்றன. தெய்யத்தில் பாடப்படும் தோற்றப்பாடல்களில் மிகப்பெரியது கட்டிவனுர் வீரன் எனும் பாடலாகும். அதுபோல கேரளத்தில் பாடப்படுகின்ற தோற்றப்பாடல்களில் தமிழ் வார்த்தைகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அதுபோல சமஸ்கிருத சொற்களும் இடம்பெறுகின்றன.[7]

காணிக்காரர்களிடையே வழங்கப்படும் தோற்றப்பாடல்களைப் போல் கோவை மாவட்டத்தில் வசிக்கும் இருளர் பழங்குடிமக்களிடையே ஒரு வழிபாட்டுமுறை காணப்படுகிறது, இதனைப் பறை குளித்தல் என்று அழைக்கின்றனர், இருளர்களைப் பற்றிய ஆய்வுநூலாகிய வனாந்தரப்பூக்கள் எனும் நூலில் இதனைக் குறித்து செங்கோ குறிப்பிடுகிறார்,

தங்களை அண்டியிருக்கும் தீய ஆவிகளை விரட்டவும், வியாதிகளைக் குணமாக்கவும் இவர்கள் பறைகுளிக்கிறார்கள். பறை குளித்தல் என்பது இருளர்களின்

பூசாரி தனது வீட்டில் இருட்டறையில் நிர்வாணமாக இருந்து அருள்வாக்கு கூறுவதாகும். தற்பொழுது ஆடையுடன் பறை குளிக்கின்றனர். பறை குளிக்கும் பூசாரியின் கையில் முச்சி எனப்படும் முறமும் அதில் ஒரு சங்கிலியும் காணப்படும். இந்த அமைப்பிற்கு முச்சுப்பெட்டிஎன்று பெயர். பூசாரியின் அருகிலிருக்கும் பெண் தனது கையில் உள்ள சுரைக்குடுக்கையில் குன்றுமணிகளை இட்டு வேகமாக அதனை அசைத்து ஒலிஎழுப்புகிறாள். சற்றுநேரத்தில் பூசாரிக்கு அருள்வருகிறது. அருள்வந்ததும் அப்பெண் முச்சுப்பெட்டியை இசைக்கிறாள். இவ்வாறு பறை குளிக்கும் புசாரியின் உடலில் இறந்துபோன ஆவிகள் புகுந்துகொண்டு பேசுவதாக இருளர்கள் நம்புகின்றனர். அந்த ஆவிகள் பறைக்குளிக்கும் பூசாரிக்கு ஆபத்து ஏற்படுத்தாமலிருக்க பலவகையான தெய்வங்களைப் பாடல்மூலமாக காவலுக்கு அழைக்கிறார்கள்.[8]

## சங்கஇலக்கியத்தில் தோற்றப்பாடல்

தெய்வத்தின் அருளினைப்பெற்று அருள்வாக்கு கூறுதல் வெறியாடல் எனும் பெயரில் சங்கஇலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது, குறிப்பாக குறுந்தொகைப் பாடல்களில் வெறியாடல் பல இடங்களில் இடம்பெறுகிறது. தொல்காப்பியர் தனது நூற்பாவில் வெறியறி சிறப்பின் வெவ்வாய்வேலன் வெறியாட் டயர்ந்தகாந்தளும் என்று வெறியாடல் பற்றிய செய்திகளைக் கூறுகிறார். வேலன் எனும் முருகக்கடவுளுக்கு வேண்டுதல் செய்து, முருகன் அருளைப்பெறுதல் பழங்காலம் முதற்கொண்டே நடைமுறையில் இருந்து வருகிறது. வேலனாகிய முருகன் தற்சமயம் பெருந்தெய்வநெறியில் சேர்க்கப்பட்ட தெய்வமாகி உள்ளது, இருப்பினும் பழனியில் உள்ள முருகன்கோவிலில் இன்றைக்குகூட தைப்பூசவிழாவில் வேலன் அருள்வந்து சாமியாடும் வழக்கம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

வெறியாடல் தெய்வ அருள்பெற்று ஆடுதல் மற்றும் அதன்மூலம் மக்களுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்த்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த வெறியாடலின் போது தெய்வத்தினை அவ்விடத்தில் ஆடுபவர் மேல் வரவழைப்பதற்காகப் பாடப்படும் பாடல் தோற்றப்பாடல் என்றும், அந்த நிகழ்விற்கு தோற்றம் என்றும் பழங்காலத்திலேயே பெயர் வழக்கத்தில் இருந்துள்ளது. இதனை குறுந்தொகையில் பின்வரும் பாடல்வரிகள் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது,

**மறிக் குரல் அறுத்து, தினைப் பிரப்பு இரீஇ,**
**செல் ஆற்றுக் கவலைப் பல் இயம் கறங்க,**
**தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா**
**வேற்றுப் பெருந் தெய்வம் பல உடன் வாழ்த்தி,**
**“பேஎய்க் கொளீஇயள்” இவள் எனப்படுதல்**

***(குறு, 263)***

இப்பாடலில் ஆட்டுக்குட்டியினைப் பலியிட்டு, பலவகை வாத்தியங்கள் முழங்க தோற்றப்பாடல் பாடி தெய்வங்களை வாழ்த்திப்பாடி, ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட நோயைத் தீர்க்க முயற்சி செய்கிறார்கள்.

தெய்வங்களைப் பாடல்கள் மூலம் பாடி வரவழைக்கும் பழங்குடிமக்களின் தோற்றப்பாடல்கள் சங்ககாலத் தமிழர்களிடத்தேயும் காணப்பட்டுள்ளது.

காணிக்காரர்களால் பாடப்படும் தோற்றப்பாடல்கள் நாட்டுப்புற கதைப்பாடல்களோடு நெருங்கிய தொடர்புடையன. கதைப்பாடலின் அனைத்துக் கூறுகளும் தோற்றப்பாடலில் காணப்படுகின்றன. இறந்து போன கதைமாந்தர்கள் சிவபெருமானிடம் வரம் வாங்கி வரும் தன்மை இங்கு மாறுபடுகிறது. இதனை வெட்டுப்பட்டவாதைகள் என்று

குறிப்பிடப்படும் கொடுஞ்சாவுகள் இறந்தபின் கைலாயத்திற்குச் சென்று சிவபெருமானிடம் வரம்பெற்று பூமிக்கு வந்துநிற்றல் எனும் அடிக்கருத்து கதைப்பாடலில் இருந்து வேறுபடுத்துகின்றது என்று யோ.தர்மராஜ் குறிப்பிடுகின்றார்[9]. காணிக்காரர்களிடையே வழங்கப்பட்டு வருகின்ற தோற்றப் பாடல்கள் தெய்வங்களைப் புகழ்ந்துபாடுதலை அடிப்படையாகக் கொண்டவை. இறந்துபோன முன்னோர்களைத் தெய்வமாக எண்ணி வழிபடும் இயல்பு பழங்குடி மக்களிடம் உள்ளது. அதுபோல் சிறந்த முறையில் வாழ்ந்த சிலர் இறந்த பின்னர் தெய்வநிலையில் காணிக்காரர்களால் வழிபடப்பட்டு வருகின்றனர். காணிக்காரர்களிடையே இத்தெய்வங்கள் தம்புரான் எனும் பொதுப் பெயரால் அழைக்கப்படுகின்றன.

## முடிவுரை

காணிக்காரர்களின் வழிபாட்டு மரபில் பாடல்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. வழிபடப்படும் தெய்வத்துடன் தொடர்புடைய செய்திகளை முழுமையாகக் கூறும் தோற்றப்பாடல்கள் வாய்மொழியாகப் பாடப்பட்டுவருகின்றன. இப்பாடல்களின் வழியாகக் காணிக்காரர்களைப் பற்றிய தக வல்களை அறிந்துகொள்ள முடிகிறது. எழுத்தறிவு இல்லாத காரணத்தாலும், வயதானவர்களால் மட்டுமே இப்பாடல்கள் பாடப்படுவதாலும் வேகமாக அழிந்துவரும் வாய்மொழி இலக்கியப் பட்டியலில் இதனைச் சேர்க்கலாம். தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய இப்பாடலை முறையாகப் பாடாவிட்டால் தெய்வம் தங்களைத் தண்டிக்கும் எனும் நம்பிக்கையாலும் பலர் இப்பாடலைப் பாட முன்வருவதில்லை. மேலும் காணிக்காரர்களில் இளம் தலைமுறையினர் சமவெளி மக்களுடன் கொள்கிற தொடர்பினால் நாகரிக வளர்ச்சியினை நோக்கி இழுக்கப்படுகின்றனர். பழமையான வரலாற்று ஆதாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இப்பாடல்கள் தற்போது அழியும்நிலையில் உள்ளன குறிப்பிடத்தக்கது.

1. Kurup K.K.N., 1973, The Cult of Theyyam and Hero Worship in Kerala, Centre for Folklor Studies, University of Calicut, Calicut. P.64
2. Burrow and Emeneau, 1968, A. Dravidian Etymological Dictionary, Clarendon Press of Oxford. Refer - ‘Tonru’
3. இராகவன் பையநாடு. 1998. ஃபோக்லோரினு ஒரு படன பத்ததி. கேரளசாகித்ய அகாடமி. திரிச்சூர், ப.93
4. ஸ்ரீதரன்சி,பி,. 1969. இந்நத்தேசா கித்யகாரணன்மார். கோட்டயம், ப,34
5. Kurup K.K.N., 1973, The Cult of Theyyam and Hero Worship in Kerala, Centre for Folklore Studies, University of Calicut, Calicut. P.67
6. தாமோதிரன்முண்டியாடி,. 2000. வரமொழியில் வராத அஞ்சுடித் தோற்றங்கள் கரண்ட்புக்ஸ். கோட்டயம், பக்,20.21
7. Kurup K.K.N., 1973, The Cult of Theyyam and Hero Worship in Kerala, Centre for Folklore Studies, University of Calicut, Calicut. P.64
8. செங்கோ.,வனாந்திரப்பூக்கள்1989, நியுசெஞ்சுரிபுக்ஹவுஸ், ப.218.
9. தர்மராஜ். யோ,. 2004. காணிக்காரப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல். தென்னிந்திய வரலாற்று ஆவணப் பதிப்பகம். நாகர்கோவில், ப,237.